**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.391/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த–பெ | சோனைமுத்து |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 40/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | யூனியன் அலுவலகம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2025**

**எதிரி ஆஜர்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து யூனியன் அலுவலகம் சென்னையில் வேலை செய்து வருகிறேன். கவிப்பிரிய அ.சா.1 எனது அக்கா. ஆஜர் எதிரி அவரது கணவர். 2002 ல் இருந்து எனது அக்காவிற்கும் அவரது கணவருக்கும் பிரச்சனை இருந்து வந்தது. அந்த விவரம் எனக்கு தெரியும். 2015 ல் எனது அப்பா, அம்மா இருவரும் இறந்து விட்டார்கள். பின்னர் எனது அக்கா மகள் என்னிடம் ஒரு நாள் 12.01.2016 அன்று செல்போனில் தொடர்பு கொண்டு எனது அக்காவை மாமா அடித்துவிட்டார்கள். அதனால் அவருக்கு தலையில் காயம் ஏற்ப்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். அதனை கேள்விப்பட்டு நான் அங்கு சென்று பார்த்த போது எனது அக்காவிற்கு உடம்பில் அடிபட்டு இருந்தது. பின்னர் அரசு மருத்துவமனை காரைக்குடிக்கு எனது அக்காவைஅழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L.
Judicial Magistrate, Karaikudi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.391/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அனிதாஸ்ரீ | த–பெ | செல்வம் |
| ஊர்: | : | திருச்சி | சமயம்: | |
| வயது: | : | 20/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | SRM கல்லூரியில் இன்ஜீனியர் பயின்று வருகிறேன். | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2025**

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் திருச்சியில் வசித்து SRM கல்லூரியில் இன்ஜினியரிங் படித்து வருகிறேன். எனது அம்மா கவிப்பிரியா அழகப்பா பல்கலைகழகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். நான் 6 ம் வகுப்பு படித்துகொண்டிருந்த போது எனது அப்பா எனது அம்மாவிடம் சண்டையிட்டு பிரச்சனையாக இருந்து வந்தது. 2015 ம் வருடம் எனது அம்மாவின் அப்பா தாத்தா இறந்து விட்டார். ஆகையால் எனது அம்மா அவருடைய 3 மாத சம்பள பணத்தை எனது தகப்பனாரிடம் கொடுக்கவில்லை. ஆகையால் குறிப்பாக 12.01.2016 அன்று காலை 7.30–8.00 மணிக்கு நானும் எனது அம்மாவும் இருந்த போழுது எனது அப்பா அங்கு வந்து பணம் தராத காரணத்தால் விளக்கமாரை எடுத்து எனது அப்பா எனது அம்மாவை மூக்கு, கை ஆகிய பகுதிகளில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அந்த சமயத்தில் எனது தகப்பனார் எனது அம்மாவை பார்த்து அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டினார். எனது அம்மாவின் ஆடையை கிழித்து விட்டார். நான் சத்தம் போட்டவுடன் அருகில் இருந்தவர்கள் அங்கு வந்து விட்டார்கள். எனது அம்மா அப்பா தாக்கியதால் மயக்கநிலைக்கு சென்றுவிட்டார். பின்னர் நாங்கள் எனது தாயாரை காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். போலீசார் அங்கு வந்து வழக்கு பொருத்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அப்பாவிற்கும் அம்மாவிற்கும் என்ன காரணத்தினால் பிறச்சனை வரும் என்றால் சம்பளம் கொடுக்காத காரணம் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு தோராயமாக மாதம் 50000 சம்பளம். சம்பள பணம் கையில் ரொக்கமாக கொடுக்க

மாட்டார்கள். வங்கியில் தான் வரவு வைப்பார்கள் என்றால் சரிதான். அந்த சம்பள பணம் எனது அப்பாவால் எனது அம்மாவின் விருப்பம் இல்லமல் எடுக்க முடியாது என்றால் சரிதான். கோபிகா என்ற நபர் எனக்கு தெரியாது. அப்பாவின் அக்கா மகள் பெயர் கோபிகா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த கோபிகா என்ற நபரின் வயது சுமார் 8-12 வயது வரை இருக்கும், என்னை விட வயது அதிகம் என்றால் சரிதான். அப்பாவின் அக்கா மகள் கோபிகா எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கும் அம்மாவிற்கும் திருமணம் நடக்கும் போது அப்பாவின் அக்கா மகளுக்கு சுமார் 6-7 வயது இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று என்ன கிழமை என்றால் தெரியாது. நியாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்று நான் பள்ளியில் பரீட்சை எழுத சென்றேன்.

Sd/. J. Karmegakannan.B.A.,B.L.
Judicial Magistrate, Karaikudi.